**நீதித்துறை நடுவர் எண்.1நீதிமன்றம், இராமநாதபுரம்**

**முன்னிலை : திரு. N. நிலவேஸ்வரன் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, இராமநாதபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

CIS. Crl.M.P.No.235/2026

CNR No. TNRM 02- 000690-2026

மோகனா ஈஸ்வரி, வயது 36
க/பெ.முத்துக்குமார்,
8/129, மேலவலசை,
ரெகுநாதபுரம்,
இராமநாதபுரம் மாவட்டம்.

... மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர்

-- எதிராக --

அரசுக்காக காவல் ஆய்வாளர் அவர்கள்,
திருப்புல்லாணி காவல் நிலையம்,
இராமநாதபுரம்
குற்ற எண்.33/2026

... எதிர்மனுதாரர் / அரசு குற்றமுறையிடுபவர்

மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு 26.02.2026-ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதார்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.T.R.தேன்மொழி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், பதிலுரை தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி, இருதரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும். . .

## உ த் த ர வு

இம்மனுவானது திருப்புல்லாணி காவல் நிலைய குற்ற எண்.33/2026 –ல், சட்டப்பிரிவுகள். 189(2), 296(b), 329(3), 115(2), 324(2), 351(3) BNS ன் கீழான வழக்கில், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தாக TN 65 BB 0306 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனம் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற பொறுப்பில் ஒப்படைக்காமல் இருந்து வருகிறது என்றும், மேற்படி வாகனத்தை ஒப்படைத்து, இடைக்கால பொறுப்பில் வழங்ககோரி இம்மனு மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் / வாகனத்தின் உரிமையாளர் தரப்பு மனு மற்றும் வாதம் :–**

மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவிலும், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதத்திலும் TN 65 BB 0306 என்ற பதிவெண் கொண்ட இருசக்கரவாகனம் மனுதாரருக்கு சொந்தமானது ஆகும். இந்நிலையில், நான் இம்மனுவில் மனுதாரர்/வாகனத்தின் உரிமையாளர் ஆவேன் என்றும், மேற்படி வழக்கில் தனக்கு சொந்தமான TN 65 BB 0306 என்ற பதிவு எண் கொண்ட EILECTRONIC ORANGE COLOUR KTM 200 DUKE என்ற தனது இருசக்கர வாகனம் கடந்த 12.02.2026 அன்று குற்ற வழக்கில் ஈடுபட்டு சென்றதாக குற்றமுறையிடுவோர் காவல் நிலையத்தினரால் வழக்கு பதிவு செய்யப்பட்ட ஷை இரண்டு சக்கர வாகனம் குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், கடந்த 12.02.2026 அன்று இவ்வழக்கின் எதிரிகள் ஒன்று சேர்ந்து இவ்வழக்கின் புகார்தாரரை வழிமறித்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி, தாக்கி கொலை மிரட்டல் செய்ததாக சட்டப்பிரிவுகள். 189(2), 296(b), 329(3), 115(2), 324(2), 351(3) BNS Act ன் படி குற்றமுறையீட்டாளாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தனக்கும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை, வேண்டுமென்றே தனக்கு சொந்தமான இரண்டு சக்கர வாகனத்தை இவ்வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளனர் என்றும், மேற்படி வாகனம் குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு இன்றைய தேதிவரை சமூகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை, ஷை வாகனம் தன் அன்றாட பயன்பாட்டிற்கு அவசியமாகத் தேவைப்படுகிறது என்றும், மேற்படி வாகனம் இல்லாவிட்டால் தனது அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும், தனது குடும்பம்

மிகவும் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறோம், மேற்படி வாகனமானது குற்றமுறையிடுவோர் காவல் நிலையத்தில் உரிய பராமரிப்பின்றி வெயிலிலும், மழையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் அதில் வெயில், மழை, காற்று ஆகியவைகளினால் பாதிக்கப்பட்டு தனது வாகனத்தை தான் பயன்படுத்த இயலாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்றும், மேற்படி தனது வாகனம் தொடர்ந்து நல்ல முறையில் பராமரித்து உபயோகப்படுத்தாமல் போனால் அதன் இயந்திரத்தில் பழுது ஏற்பட்டு உபயோகமற்றதாகிவிடும் என்றும், மேற்படி வாகனத்தை இடைக்கால பாதுகாப்பில் தன் வசம் ஒப்படைக்க உத்தரவிடும்பட்சத்தில் தான் அதை நல்லமுறையில் பராமரித்து பாதுகாத்து வருவேன் என்றும், சமூகம் நீதிமன்றம் கோரும்போது தவறாமல் ஆஜர் செய்வேன் என்று உறுதிகூறுவதாகவும், மேற்படி வாகனத்தின் ஆர்.சி.புக் அசல் தன் கைவசம் இருந்து வருகிறது என்றும், மேற்படி தனது வாகனத்தை இடைக்கால பாதுகாப்பில் தன் வசம் ஒப்படைப்பதில் குற்றமுறையிடுவோருக்கு எவ்வித ஆட்சேபனையும் இருக்கக்கூடியதில்லை என்றும், எனவே மேற்படி வழக்குச்சொத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து பின்பு மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

**<u>எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் மற்றும் வாதம்:-</u>**

இந்த மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் பேரில் எதிர்மனுதாரர்/அரசுத்தரப்பில் அறிவிப்பு கோரப்பட்டது. அந்த பதிலுரையில் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும் வழக்குச் சொத்தினை மனுதாரரிடம் ஒப்படைத்தால் வேறு நபருக்கு விற்பனை செய்து விடக்கூடும் என்பதாலும், வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தமாட்டார் என்பதாலும் வழக்குச்சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடும் ஆட்சேபனை அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தீர்வு :-</u>**

இம்மனுவில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்குக்கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி மனுதாரர் தரப்பு ஆவணமான அசலுடன் ஒப்பிடப்பட்ட ஆர்.சி.புக் நகலினை பரிசீலனை செய்கையில் வழக்குச்சொத்தான TN 65 BB 0306 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மனுதாரர்தான்

என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் மனுதாரரின் உரிமைத்தன்மையை ஆட்சேபித்து அரசு தரப்பில் எத்தகைய எடுத்துரைப்பும் செய்யப்படவில்லை. எனவே, வழக்குச்சொத்தான வாகனத்தின் உரிமையாளர் இம்மனுதாரர் தான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்விதம், வழக்குச் சொத்தானது மனுதாரருக்கு சொந்தமானது என்பதை அறிய முடிகிறது.

மேலும் மேற்படி வழக்குச்சொத்தானது பயன்படுத்தாமல் வைத்திருப்பதால் இயற்கை சீற்றங்களால் அதன் பாகங்கள் துருப்பிடித்து செயலிலக்கக்கூடும் என்பதாலும், வாகனத்தின் மதிப்பு குறைவதற்கு வாய்ப்புள்ளது என்பதாலும், அரசு தரப்பில் புலன் விசாரணை அவசியத்தன்மை மற்றும் வழக்குச்சொத்தின் பரிசோதனை தன்மை பற்றி எதுவும் எடுத்துரைக்காததை கருத்தில்கொண்டும், மேற்படி வழக்குச்சொத்தை அதன் உரிமையாளர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே, மேற்காணும் பரிசீலனைகளின் அடிப்படையில் மனுதாரர் வசம் வழக்குச்சொத்தை பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**நிபந்தனைகள்**

1. காவல் துறையினர் மேற்படி வழக்குச்சொத்தான TN 65 BB 0306 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் இந்நீதிமன்றத்தில் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

2. மனுதாரர் ரூ. 1,00,000/க்கு பிணைப்பத்திரம் எழுதித்தரவேண்டும்.

3. மேலும், மனுதாரர் தனக்காக இரு நபரும், தலா ரூ.10,000/– பிணை ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

4. மேலும், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மேற்படி வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தின் நகலினை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

5. மேற்படி வழக்குச்சொத்தானது நான்கு பக்கமும், நன்கு தெரியும் வகையில் அதனுடைய போட்டோ, குறுந்தட்டு மற்றும் பஞ்சநாமா தாக்கல் செய்ய வேண்டும்.

6. மேற்படி வழக்குச்சொத்தை உருமாற்றமோ, விற்பனையோ செய்யக்கூடாது.

7. காவல்துறையினர் புலன் விசாரணைக்கு கோரும் போது, மேற்படி விசாரணைக்கு ஒப்படைத்து ஒத்துழைப்பு தர வேண்டும்.

8. நீதிமன்றம் கோரும்போது மேற்படி வழக்குச்சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவேண்டும்.

இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ஆம் நாள் இவ்வுத்தரவு என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

N NILAVESHWARAN

Digitally signed by N NILAVESHWARAN
Date: 2026.03.06 14:40:00 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.